இவ்விற்பனை நிலையங்களைப் புதுப்பித்து மற்றும் அழகுபடுத்தி வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில், ரூபாய் 5 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

4. ரூபாய் ஒரு கோடி செலவில் மாமல்லபுரத்தில் அமைந்துள்ள நகர்ப்புறக் கண்காட்சித் திடல் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின்மூலம் மாமல்லபுரம் கடற்கரைச் சாலையில் சுமார் 4.45 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 4.25 கோடி செலவில் ஒரு நிரந்தர நகர்ப்புறக் கண்காட்சித் திடல் அமைக்கப்பட்டுள்ளது. இதனை விரிவுபடுத்தும் வகையில், மேலும் 14 விற்பனை அரங்குகள், உணவுக்கூடம், கைத்திறப் பொருட்கள் செய்முறை விளக்கக் காட்சி அரங்கம் மற்றும் நுழைவு வாயில் போன்ற பணிகளை மேற்கொள்ள ரூபாய் ஒரு கோடி நிதியுதவி வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் 7 பேர் இன்று பேசியிருக்கின்றார்கள். இந்தத் துறையைப் பற்றி ஒருவர்கூடப் பேசவில்லை. 8 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆக, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒட்டுமொத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண்–28 செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) குறித்து மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் நாளை (7–9–2021) பதிலுரை வழங்குவார்கள் என்பதைப் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

9. அரசினர் தீர்மானம்

பேரவை விதி 32—ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 7—9—2021, செவ்வாய்க்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[2021 செப்டம்பர் 6

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐத் தளர்த்தி, நாளை (7—9—2021), செவ்வாய்க்கிழமை அன்று அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 7—9—2021 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. (குறுக்கீடு) நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்களுக்கு நாளைக்கு வந்தவுடன் முதல் கேள்வி கொடுத்துவிடுகிறேன். (குறுக்கீடு) கொடுத்துவிடுகிறேன். (குறுக்கீடு) நாளைக்கு நான் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நாளைக்கு வந்தவுடன் நான் வாய்ப்புக் கொடுப்பேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7—9—2021), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

20. 2018—2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை லிமிடெட் நிறுவனத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை.